உ

கடவுள் துணை.

செந்தமிழ்.

மதுரைத்தமிழ்ச்சங்கத்தினின்று மாதந்தோறும்வெளிவரும்

ஒரு தமிழ்ப்பத்திரிகை.

முப்பத்துமூன்றாந் தொகுதி.

Vol. XXXIII.

யுவ—தாது ௵

1935–1936.

பத்திராசிரியர்—திரு. நாராயணையங்கார்.

மதுரைத் தமிழ்ச்சங்க முத்திராசாலை,

மதுரை.

முப்பத்துமூன்ருந்தொகுதியுள்ளுறை.

விஷயம்.	எழுதியவர்.	பக்கம்.
அநுதாபக்குறிப்பு:—	பத்திராசிரியர்.	௧௧௪
அழானும் புழானும்:—	ஸ்ரீமத். க. சு. நவநீதகிருஷ்ணபாரதியார்.	௨௯௯
இரங்கற்பாக்கள்:—	ஸ்ரீமத். சு. நல்லசிவன்பிள்ளை.	௧௧௫
இரண்டாம் இராஜாதிராஜன்:—	ஸ்ரீமத். திரு. சோமசுந்தரதேசிகர்.	௨௯௩, ௩௨௭
ஒலியெழுத்துக்கும் உருவமுண்டு:—	ஸ்ரீமத். T. R. வீரராகவையங்கார் வித்வான்; பண்டிதர்.	௨௬௯, ௩௧௩.
ஓர் ஐயவினு:—	ஸ்ரீமத். ச. சுப்பிரமணியபிள்ளை	௧௯௬
கம்பராமாயண இன்கவித்திரட்டு:-	ஸ்ரீமத். ராவ்ஸாஹிப். வெ. ப. சுப்பிரமணிய முதலியார்.	௭, ௪௯, ௧௫௭, ௨௩௩, ௨௬௫, ௨௭௭
குமாரசுவாமிமுதலியார்:-	ஷை ஷை	௧௪௧
ஷையார் விஷயமான சரமகவிகள்:—	ஸ்ரீமத். மு. ரா. அருணசலக்கவிராயர்.	௧௪௬
கோவை:—	ஸ்ரீமத். ரெ. அப்புவையங்கார்	௧
சகரமுதன்மொழி வரலாறு:—	ஸ்ரீமத். R. நரஸிம்ஹன் B.A. (Hons.)	௫௭
சடையவர்மன் குலசேகரபாண்டியன்:-	ஸ்ரீமத். துடிசைகிழார், அ. சிதம்பரனுர்.	௧௬௫
சில ஆராய்ச்சி:—	ஸ்ரீமத். சி. கணேசையர்.	௧௦௫
சீமாறன் பரசக்கர கோலாகலபாண்டியன்:-	ஸ்ரீமத். துடிசைகிழார் அ. சிதம்பரனுர்	௬௨
சென்னைப் பல்கலைக்கழகக் கமிஷனர்களுக்கு மதுரைத்தமிழ்ச்சங்கத்தார் படித்துக்கொடுத்த வரவேற்புப்பத்திரம்:—		௩௩௮
தமிழிற் சகரமுதற்சொற்கள்:—	நல்லூர். சுவாமி ஞானப்பிரகாசர்.	௭௫
திருவள்ளுவர்காலம்:—	ஸ்ரீமத். R. நரஸிம்ஹன் B.A. (Hons.)	௮௧, ௧௨௯, ௧௮௧, ௨௧௩
நியாயப்பிரவேச மணிமேகலை:—	திரு. நாராயணையங்கார், பத்திராசிரியர்	௨௫, ௩௩, ௬௫, ௮௯, ௧௧௭, ௧௪௯, ௧௭௩, ௧௯௭, ௨௨௧, ௨௫௩, ௨௮௫, ௩௧௭.

பாண்டியர்வரலாறு:—ஸ்ரீமத். T. V. சதாசிவபண்டாரத்தார் ௩௯, ௧0௭, ௧௩௩, ௧அ௯, ௨0௯, ௩௩௯

புறப்பாட்டின் முறைவைப்பு:— } ஸ்ரீமத். R. நரஸிம்ஹன் B.A. (Hons.) ௧௭

மதிப்புரை:— ௩0, ௧௧0, ௧௬௨, ௧௯௪, ௨௫௧, ௨௭௯

மதுரைத்தமிழ்ச்சங்கநிர்வாகஸபைத்தீர்மானங்கள்:—௧0௩, ௧௯௩, ௩௪0

மலரி:— ஸ்ரீமத். திரு. சோமசுந்தரதேசிகர் ௧௪0

ஸமாமணி:—ஸ்ரீமத். V. S. ராமஸ்வாமி சாஸ்திரியார் B.A. B.L. ௨௪௧, ௨௭௩, ௩0௧, ௩௪௧

விபீஷணசரணாகதி:—ஸ்ரீமத்: N. R. கிருஷ்ணஸாமி ஐயங்கார் B.A., B.L. ௬௯

அநுபந்தம்.

I. விஷயங்கள்.

ஆங்கிலகலாசாலைத்தமிழ்ப்பரீக்ஷைத் தேர்ச்சிக்குறிப்பு:—பகுதி ௧0

தனித்தமிழ்ப்பரீக்ஷைத் தேர்ச்சிக்குறிப்பு:— „ ௧0

மதுரைத்தமிழ்ச்சங்கத்தின் வரவுசெலவுகணக்கு:—பகுதி. ௨, ௩, ௫, ௬, ௭, அ, ௯, ௧௨.

II. நூல்கள்.

[முற்றுப்பெற்றவை.]

பெருந்தொகை:—ஸ்ரீமத். மு. இராகவையங்கார். பகுதி. ௧—௪

சூடிக்கொடுத்தநாய்ச்சியார் தோத்திரப்பாமாலை மூலமும் உரையும்:— } ஸ்ரீமத். ரெ. அப்புவையங்கார். பகுதி. ௧, ௩, ௫, ௬, ௭, அ, ௯, ௧0

[முற்றுப்பெறாதவை.]

சிராமலைக்கோவை (குறிப்புரையுடன்):— } ஸ்ரீமத். மஹாமஹோபாத்யாய தாக்ஷிணாத்ய கலாநிதி டாக்டர் உ. வே. சாமிநாதையர். பகுதி. ௧—௧௨

குருகைமான்மியம்:—T. K. இராமாநுஜையங்கார், உதவிப்பத்திராசிரியர். பகுதி. ௬, ௭, அ, ௧௧, ௧௨.

வாயின் மறுக்கப்பட்ட பாணன் கூறல்.

411. பொன்னே தருமணிக் கம்மணிக் கேதரும் பொன்னிகராய்த்
தன்னே ரிலாதொளி ரூரனு நீயுஞ் சமைதவினம்
மன்னே விடவரு மென்னே முனிவதென் மாண்பருள்வாய்
மின்னே ரிடையொரு பாகன் சிராமலே மெல்லியலே. (உ0)

விறலி வாயின்மறுப்பு.

412. தேடித் தலைவர் பரத்தையர் சேரியிற் சென்றவன்றே
நாடிப் பொறிபுலன் யாவு மிழந்தன நண்ணியிங்ஙன்
பாடிப் பயனெவ னுமவர் பாங்குறப் பாடினிமன்
ருடிக் குகந்த சிராமலேப் பாடினி யன்புகொண்டே. (உக)

கூத்தன் வாயின்மறுத்தல்.

413. அரியு மறிவருந் தாளோன் சிராமலே யாரியகேள்
புரியு நடன மடந்தையர்க் குன்றிறம் போதநன்ருய்த்
தெரியு மவர்பயில் சேரியி லாடிடச் செல்லெனக்கிங்
கெரியு மழலினெய் யூற்றுவ தாமுன் னெறினடமே. (உஉ)

---

411. மன் ஏவிட; மன்னே விட எனப் பிரித்தலும் ஆம். முனிவது என்ன மாண்பு?

412. பொறி புலன் யாவும் இழந்தனம்: "மாசிலாமணி யார்புகழைக், கேளார் செவியிற் குணம்போன தென்செவி" (திருவாவடுதுறைக்கோவை, 415.) அவர்-பரத்தையர். பாடு இனி-இனிப் பாடுவாயாக; பாடினி: அண்மை விளி; "நண்ணுங் கருணேக் குலோத்துங்க சோழனன் ருட்டில்வஞ்சம், பண்ணும் பரத்தையர் சேரியிற் பாடினி பாடினிப்போய், உண்ணுங் கடுவு மமுதமு நாண லு மொண்கரும்பும், மண்ணும் பசும்பொன்னு மொன்ருக வெண்ணிய மன்னவர்க்கே" (குலோத். கோவை, 456); "மயிலின் புறத்து முருகனைப் போல வருமகிணன், பயிலும் பரத்தையர் பாடியிற் பாடினி பாடினியே" அம்பிகா. 487.

பி-ம். 'பொறிபுலன் யாவு மகிழ்ந்தனம்.'

413. ஆரிய - ஆரியக்கூத்தனே; "ஆரியர் கயிறுடு பறை" (குறுந். 7.) நடனம்புரியும் மடந்தையர்க்கு. போத - மிக.

பாங்கி வாயில் மறை.

414. சேயா னனங்கண்டு செய்வன செய்திலர் செய்யகனி
வாயார் மழலை மகிழ்வுறக் கேட்டிலர் மானனையாய்
தாயான வீசர் சிராமலை வாழுந் தலைவரென்றன்
வேயான தோளிணை சேரவென் றேவின்று மேவினரே. (உ௯)

விருந்தோடு வந்துழிப் பொறுத்தல்கண்டு தலைமகன் மகிழ்தல்.

415. பின்னார் தருசடை யெம்மான் சிராமலைப் பேதையுடற்
பொன்னார் பசுமையுந் திம்பா லொழுகெழிற் பூண்முலையும்
மின்னா ரிடையுஞ் சிசுவுங்கைக் கண்டு விழிகுளிர
என்னார் தவத்தின் பயனெனத் தோன்றிய திவ்விருந்தே. ()

தலைவன் புதல்வனைக் காண்டல்.

416. தேனார் மலர்சுரர்க் காக்கிநெய் வாக்கிச் செழுந்தழல்வாய்த்
தானார வேட்டு மறையவர்க் காநிதி தானளித்து
மானார் கரத்தன் சிராமலை நேரிறை வன்மகவை
ஆனா மகிழ்வி னுடனெடுத் தாகத் தணைத்தனனே. (உ௫)

மகப்பொறைகூர்ந்தவண்ணம் உரைத்தல்.

417. சேயா ரிதழ்வெளுத் தாகம் பசந்து சிகரிநிக
ராயார் முலைக்கண் கறுத்துச் சிராமலை யாயிழைக்குத்

---

414. சேய் ஆனனம் - பிள்ளையின் முகத்தை; பிள்ளை பிறந்தவுடன் தந்தை அக்குழந்தையின் முகத்தைக் காணுதல் மரபு; "செறுவர் நோக்கிய கண்டன், சிறுவனை நோக்கியுஞ் சிவப்பா னவே" (புறநா. 100: 10-11); "கோமகார் திருமுகங் குறுகி நோக்கினான்" கம்ப. திருவவதாரப். 112.

415. பின் - பின்னுதல். கைச்சிசு - கைக்குழந்தை.

416. மலரைச் சுரர்க்காக்கி. செழுந்தழல்வாய் நெய் வாக்கி; வாக்கி - சொரிந்து. இறைவன் - தலைவன்.

417. கருப்பந்தரித்தமையால் தலைவியின் இதழ் முதலியவைகள் அழகிழந்தன வென்பது கருத்து. முன்பு இருந்த நிலையைக் கூறியது;

தாயா மமல னருளாற் கருப்பந் தரிக்கவிசைத்
தூயா யெழில்பெறத் தோன்று விடைவந்து தோன்றியதே.()

பள்ளியின் அழுங்கல்.

418. மின்காட்டி யொல்கிடை பாகன் சிராமலை மெல்லியலாய்
முன்காட்டி வேலினைச் சங்கொலி காட்டி முரண்மதமாப்
பின்காட்டி மாமணித் தேர்காட்டி நீபொரும் பெற்றியின்றி
வென்காட்டி யிந்த வமளியின் மேவுதன் மேன்மையன்றே. ()

"சீலந் தகைபெறு சாலியன் ளுள்சிறு வற்றரித்த, காலந் தமது கவினிறம் பெற்றன காலமின்னும், கோலந் தருஞ்செங் குமுதமு நீலமுங் குன்றெடுத்த, பாலன் றுயில்கொண்ட பாயலுங் காலைப் பதுமமுமே" (அம்பிகாபதிகோவை, 461) என்பதனாலும் இது விளங்கும். இச்செய்யுள் பாங்கி கூற்று. 'பிறவு மென்பதனால் மகப்பொறைகூர்ந்தவண்ணமுரைத்தலும்.........வரப்பெறும்' இ-வி. சூ. 555, உரை.

418. வேலினை முன் காட்டி; வேலென்றது கண்களை. சங்கு: கழுத்து. மதமா: தனம். போர்க்கருவிகளாகிய வேல்முதலியவற்றை முன்னே காட்டி முன்பு போர்செய்ததைப் போலன்றி; போர்த்தொடக்கத்தில் சங்கொலித் தல் மரபு; "முன்னெற்றை யிருசங்க முடனூத வெதிர்சென்று முனைவெல்லு மா, மன்னெற்றர்", "மலர்ந்த பற்ப வனநிகர் பைந்துழாய், அலங்கல் வித்தக னேந்தின வாதலால், வலம்பு ரிக்குலம் வாழ்வுபெற் றேமெனச், சலஞ்ச லத்தொடுஞ் சங்கொடு மார்த்தவே" (வி. பா. நிரைமீட்சி. 5, முதற்போர். 19.) வென் - முதுகு. அமளி - படுக்கை; போரவாரமென்பது வேறுபொருள். யுத்தத்திற்கு உரிய கருவிகளைப் பெற்றிருந்தும் போர்செய் யாமற் புறங்காட்டுதல் நன்றன்றென்பது கருத்து; "அறந்தந்த பொன் பொலி கூடற் பிரான்வெற்பி லம்பொற்படாம், நிறந்தந்த கும்ப மதயானை யுங்நெடுந் தேர்ப்பரப்பும், மறந்தந்த விற்படை வாட்படை யுங்கொண்டு மற்றொருநீ, புறந்தந்த வாவணங் கேநன்று காமவெம் போரினுக்கே" (மது ரைக்கலம். 16); "அறங்காட் டியகாத் தைவே லசதி யணிவரையில், நிறங் காட்டுங் கஞ்சத் திருவனை யீர்முக நீண்டகுமிழ்த், திறங்காட்டும் வேலுஞ் சிலையுங்கொல் யானையுந் தேருங்கொண்டு, புறங்காட்ட லுந்தகு மோசிலைக் காமன்றன் பூசலிலே" (அசதிகோவை); "அறங்காட்டி யென்னைப் புரப் பான் புகலி யனையவரே, நிறங்காட்டி யுங்கண் மதவேள் சினந்து நெடுஞ் சிலையின், மறங்காட்டி நின்று சமராடு கால மதித்தெனக்குப், புறங்காட்டி மெல்லிய லாரெனும் பேரைப் புதுக்கினிரே" சீகாழிக். 494.

சீறேலென்றவள் சீறடி தொழுதல்.

419. மாலையன் றாய்மறை மாதவர் தேட மகிழ்ந்தெனுளம்
ஆலையந் தானெனக் கொண்டோன் சிராமலை யாயிழையுன்
காலையம் போருக மாம்பதம் போற்றுவன் காதலினாற்
சேலையம் பாம்விழி யாலெனைப் பார்த்தருள் சீறலையே. (உ௮)

ஈதேங்கையர் காணின் நன்றன் றென்றல்.

420. ஈதென காரண நீயெனைப் போற்றி யிறைஞ்சலில்லம்
போதென வாழயன் மால்பணிந் தேத்தப் புரமெரித்து
மாதென வோர்புற மானான் சிராமலை மானுமன்னா
சூதென வார்முலை யெங்கையர் காணிற் றுரிசுறுமே. (உ௯)

நின்னல தங்கவர் யாரையும் அறியேனென்றல்.

421. வானேய் மதியமு துண்ணுஞ் சகோர மறந்துமொன்றைத்
தானேய முற்றுண வுன்னிடு மோவென் றவப்பயனும்
தேனே யினிய கனியே யமலன் சிராமலைவாழ்
மானே யுனையன்றி யானறி யேனொரு மானையுமே. (௩0)

காமக்கிழத்தியைக் கண்டமை பகர்தல்.

422. ஆதி நடுவந்த மானான் சிராமலை யன்னமன்னா
வீதி யிடையுன் மகன்விளை யாட வியந்தெடுத்துச்
சோதி முகமுத்த முண்டுச்சி மோப்பநின் றோன்றலெங்காய்
நீதி யுறுமுன தில்லி தெனவெள்கி நீங்கினளே. (௩௧)

---

419. காலை அம்போருகம்-மலர்ந்த தாமரை. உன்பதத்தைக் காதலினாற் போற்றுவன். சேல் ஐ அம்பு ஆம் விழி - சேலும் அழகிய அம்பும் ஒப்பாகும் விழி; ஐபம்பு - பஞ்சபாணமுமாம்; "அஞ்சம்பையு மையன்றன தலகம்பையு மளவா, நஞ்சங்களை வெலவாகிய நயனங்களை யுடையாள்" கம்ப. கங்கைப். 3.

420. ஈது - இங்ஙனம் வணங்குதல். என்ன காரணம். இறைஞ்சல்-வணங்காதே. போதை இல்லமெனக்கொண்டு வாழும் அயன். எங்கையரென்றது பரத்தையரை.

421. சகோரம்-சந்திரகிரணத்தை உண்பதொரு பறவை. தான் நேயமுற்று. உண - உண்ணுதற்கு.

422. ஒருமங்கை எடுத்து முத்தமுண்டு மோப்பவென ஒருசொல் வருவிக்க. 'நின்தோன்றல்' முதலியன காமக்கிழத்தியை நோக்கித் தலைவி கூறியவை.

தலைமகளைப் பாங்கி புலவி தணித்தல்.

423. நனவி லுடலுறு மாவி நயந்தொரு நாடணுகிக்
கனவி லருந்திவந் தாங்ககன் றுற்றனர் காந்தரென்று
நினைவி லுணர்ந்தரு ளெம்மான் சிராமலை நேரிழையாய்
மனைவி மகிழ்நன் குறைநினைந் தாற்கற்பின் மாண்பெவனே. ()

தலைமகள் தணியாளாகத் தலைமகன் ஊடல்.

424. பண்டுறு மார்வத் தெனைப்பொரு ளாகப் பரிந்துநெஞ்சிற்
கொண்டுறு சேடிய ராயத்தி னீங்கிக் கொதிக்குமழல்
மண்டுறு பாலை வனந்தனி லெய்திய மங்கையன்றே
வண்டுறு மோதி யிடத்தார் சிராமலை மாதிவளே. (௫௫)

பாங்கி அன்பிலை கொடியையென் றிணர்த்தார்மார்பனை இகழ்தல்.

425. பெண்பான் மகிழும் பிரான்றன் சிராமலைப் பெண்ணமுதை
நண்பான் மருவி நலமுட னீரிந்த நாளில்விலைப்
பண்பார் பரத்தையர் மாலினன் றேரைப் பணிவதற்காப்
புண்பாவை நெஞ்சுறச் சீறலிர் போமிடைப் போதுகவே. (௫௪)

---

423. உடல் - ஸ்தூல சரீரம். ஆவியென்றது சூக்ஷ்மசரீரத்தை. காந்தர் அகன்று உற்றனர்.

424. இவள், பண்டுபரிந்து நீங்கி எய்திய மங்கையன்றென்க. இது, "தழங்கார் புனல்வையை சூழ்தஞ்சை வாணன் றனதருள்போற், பழங்காத லெண்ணலென் பைதனெஞ் சேயிவள் பண்டுபைம்பொற், கழங்கா டிடமுங் கடிமலர்க் காவுங் கடந்துபுள்ளும், வழங்கா வழிநமக் கோர்துணை யாய்வந்த மானல்லளே" (தஞ்சை. 412) என்னும் செய்யுட்கருத்தைத் தழுவிவந்தது.

425. முன்னம் நண்பால் நலமுடன் மருவி என ஒருசொல் வருவிக்க. பாவைநெஞ்சு புண்ணுற. போம் இடை - போகும் இடத்திற்கு; பரத்தையர் வீட்டிற்கென்பது குறிப்பு.

காமக்கிழத்தி வாயில்வேண்டல்.

426. அன்போ டுறுகற்பி னூர்தங் கொழுந ரகமகிழப்
பொன்போன் மருவி யவர்குற்றம் யாவும் பொறுப்பரன்றே
மின்போ லிடையுமை பாகன் சிராமலை மெல்லியலாய்
என்போ லியர்க ளௌனவூட னின்னுளத் தேய்வதன்றே. (௩௫)

பாங்கி வாயினேர்வித்தல்.

427. கார்தரு சோலைச் சிராமலை யீசர் கவின்மதுரை
ஆர்தரு சங்கத் திருந்தன்று தேர்தமி ழாய்புலவோர்
தேர்தரு மேனை மொழியுங்கற் றற்றன்பர் சீர்மைமின்னே
வார்தரு பூண்முலை பீர்பூப்ப வாடுதன் மாண்பதன்றே. (௩௬)

ஆயிழை மைந்தனும் ஆற்றுமையும் வாயிலாக வரவெதிர்கோடல்.

428. தேடத் தகாத பொருளாகு நம்மிளஞ் சேயைக்கண்டு
வாடத் தகாவுளம் வாடலென் னென்றுகை வாய்ந்துவந்தார்
கூடத் தகாருடன் கூடின ரென்று கொழுநரைநீ
ஊடத் தகாதினி யெம்மான் சிராமலை யொண்ணுதலே. (௩௭)

---

426. அன்போடுறு......பொறுப்பரன்றே: "அன்புடைக் கணவ ரழிதகச் செயினும், பெண்பிறந் தோர்க்குப் பொறையே பெருமை" (பெருங். ௬. 14: 98-9.) எய்வது அன்று - பொருந்துவது அன்று.

427. கார்-கருமையை; கார்தருசோலை - மேகத்தை ஒத்த சோலை; "தடங்கார் தருபெரு வான்பொழில்" (சிற். 31, பேர்.) சிவபெருமான் சங்கத்திருந்து தமிழாய்ந்தது, இறையனாகப்பொருளுரை, திருவிளையாடற் புராணங்கள் முதலியவற்றால் அறியலாகும். கற்றற்று - கற்றாற்போல்வது. பீர் - பசலை. அன்பர் சீர்மை கற்றற்று என்க.

428. பொருளாகும் சேய்: "தம்பொரு ளென்பதம் மக்கள்" (குறள், 63.) கைவாய்ந்து - கையிலேந்தி.

தலைவன் புணர்ந்து நீங்கியபின் வந்த பாங்கியோடு தன்மகனைப் புகழ்தல்.

429. பேறு களிற்பெரி தாமைந்தர்ப் பேறெனப் பேறுடையோர்
கூறு மொழிப்பொருண் மெய்யே யெனது குமரனன்பர்
ஏறு மிரதத் தொடும்வரச் செய்தின்ப மீந்ததனாற்
சீறு மாவைத் தரித்தோன் சிராமலைச் சேயிழையே. (௩அ)

தலைவி தலைவனைப் புகழ்தல்.

430. கரியவ ராரண ரிந்திர ராயினர் காணவென்றும்
அரியவர் வாழுஞ் சிராமலை மானுமென் னுருயிராம்
உரியவர் கேண்மை யிடையூறின் றுய்வளர்ந் தோங்கியதாற்
பெரியவர் கேண்மை வளர்பிறை யாமெனும் பெற்றியொத்தே.

பாங்கி தலைவியைப் புகழ்தல்.

431. அணங்கொரு பாகர் சிராமலை மானனை யாய்கொழுநன்
தணந்தய லாரைத் தழுவும் பிழைநெஞ்சிற் றுன்மறந்து
குணங்கொடு போற்றிப் பணிந்தில் லறம்புரி கொள்கையினால்
மணம்புரி மாத ருந்ததி நீயென வந்திப்பரே. (௩0)

---

429. எனது குமரன் ஈந்ததனால். பேறுகளில்.......................
மெய்யே: "பெறுமவற்றுள் யாமறிவ தில்லை யறிவறிந்த, மக்கட்பே றல்ல பிற" (குறள், 61); "இம்மை யுலகத் திசையொடும் விளங்கி, மறுமை யுலகமு மறுவின் றெய்துப, செறுநரும் விழையுஞ் செயிர்தீர் காட்சிச், சிறுவர்ப் பயந்த செம்ம லோரெனப், பல்லோர் கூறிய பழமொழி யெல்லாம், வாயே யாகுதல் வாய்த்தனந் தோழி" அகநா.66.

430. ஆரணர் - பிரமதேவர். காண - காணுதற்கு. பெரியவர்...
.........யொத்தே: "பெரியவர் கேண்மை பிறைபோல நாளும், வரிசை வரிசையா நந்தும்" (நாலடி.125); "நிறைநீர நீரவர் கேண்மை பிறைமதிப், பின்னீர பேதையார் நட்பு" குறள், 782.

431. மணம்புரியும் காலத்தில் மாதர்கள் அருந்ததியை வணங்கும் மரபை நினைந்து, 'மணம்புரி மாத ருந்ததி நீயென வந்திப்பர்' என்றார்.

உகூ. ஓதற் பிரிவு.

கல்விப்பிரிவு தலைவன் பாங்கிக்கறிவுறுத்தல்.

432. கொடுக்கக் கொடுக்கக் குறையாத வான்பொருள் கொள்பவர்கள்
மடுக்கத் தெவிட்ட லிலாவின்ப வாரி மகிழ்ந்துவல்லோர்
தொடுக்கத் தொடுக்கத் தொலையா மணமலர் தூயகல்வி
அடுக்கக் கருணை புரிவோன் சிராமலை யாயிழையே. (க)

இதுவுமது.

433. பன்னு கலைபெறி னெம்மான் சிராமலைப் பான்மொழியாய்
மன்னர் புகழும் விளங்காட்டுப் பாக்கநன் மாநகர்வாழ்
கன்னவ ராய மரபரு ணசல கன்னனருள்
தென்னவன் மாரியப் பேந்த்ரன் மகிழ்ந்தருள் செய்குவனே. ()

தலைவனைப் பாங்கி விலக்கல்.

434. பாம்பாவை யூர்ந்தணி வோனன்ப ரன்பினிற் பாடுமிசை
ஆம்பாவை வேய்ந்தரு ளெம்மான் சிராமலை யன்னமன்னு
பூம்பாவை யுய்ந்திடச் செய்யும் பிரானிற் புகலும்விஞ்சை
தாம்பாவை யுய்ந்திட வுண்மேடலக் கல்விக்குச் சார்ந்தருளே.()

---

432. கல்வியானது வான்பொருள், இன்பவாரி, மணமலர்; "சொல் லென்னும் பூம்போது தோற்றிப் பொருளென்னும், நல்லிருந் தீந்தாது நாறுதலால் - மல்லிகையின், வண்டார் கமழ்தாம மன்றே மலையாத, தண்டா ரான் கூடற் றமிழ்" மதுரைக்காஞ்சி, இறுதிவெண்பா.

433. கலை - பலவகையான கல்வி.

434. ஆவை ஊர்ந்து பாம்பை அணிவோன்; எதிர்நிரனிறை. இசை ஆம் பாவை - இசை நிறைந்த பாட்டுக்களை. பிரானில் - திருஞானசம்பந்த மூர்த்திநாயனாரைப் போல. விஞ்சை - வித்தை. இறந்தவர்களைப் பிழைப் பிக்கும் வித்தையைக் கற்றுக்கொண்டு வாரும்; "ஆரும் விரும்பிய கல்வி மே லாசை யுமக்குள தாயிடிற், பாருற வென்பொரு பாவையாப் பாடிய பாவலர் போலவே, நீரு மருந்தமிழ் செப்பிடு நீர்மை யறிந்திவ ணேகுவீர், மேரு நெடுஞ்சிலை யத்தனார் வீறரு ணாபுரி வெற்பரே" (அருணைக். 20); "ஓது வதற்கண்ண லேபிரிந் தாலொண் மயிலையென்பு, மாது படுத்தினர் போலோதி வாரும் வருந்தமிழைக், கோது பிரித்தறி கோமான் குலோத் துங்கன் கோழிவெற்பில், தீது படக்கொடி யாவிசென் றூலுந் திருப்புகைக் கே" (குலோத். கோவை, 479); "விண்ணுக்கு மாமதி காயவெங் காம வெரி கொளுந்தப், பண்ணுக்கு மாமொழி மாதங்க மாம்பஞ்ச பூதியம்போம், கண்ணுக்கு மூக்குச் செவியாக்கை யற்ற கடத்திலங்கம், பெண்ணுக்கு வார் தமைப் போலோதி வாரும் பிரிபவரே" தனிப்பாடல்.

1630 *மத்தகத் தழுத்துவச் சிரத்தினைப் பறித்துயர்த்தி
மத்தவெற் புடற்றிநிற்பதா
னத்தகத் தடக்குமைக் கடற்கடைக் கனற்சினத்த
னச்சுளத்தி னுற்றெதிர்ப்பவே
பித்தகத் தழைத்தடற் பொறிப்புலிப் புலத்தினுற்ற
பெற்றமொப்ப வட்கியுட்குநீ
டுத்தமச் சுவற்கமுற்ற கொற்றவற் கிமைப்படுத்த
வொத்தபத்து டைச்சதக்கணே. (கசு)

1631 *புற்புதக் கடக்கவுட் பொருப்புவச் சிரத்தினைப்
புழைக்கையிற் புடைத்தியக்கவே
யுற்றதுக்கி ரச்சமர்க் குடக்குமிக் குரத்துரத்
துடைத்ததைப் பறித்துருத்திடா
வற்புதத் தெதிர்த்தியக்க நெட்டடிக்கு ளூற்றதொற்றை
[1]யைத்துளைத் திளக்கிமுட்டவே
தெற்குவெற் பிணைத்துளைத்த தப்புறப் புறக்கொடைத்
திசைக்களிற்றி னைத்துளைத்ததே. (கஎ)

வேறு.

1632 உளமுட்கம ரிடையிற்கர னுரனுற்றெதிர் பெயவீழ்
களமுக்கிய வரைதிக்குயர் கரைகட்டலி னிபநீள்
குளநெக்கிழி குருதிப்புனல் குலிசப்படை குடைபோர்
வளமுட்கலன் மருமப்புழை மடைபுக்கத னெதிர்சார். ()

1633 அகலத்துளை யெருவைப்புன லணையிற்செறு கிரியை
யகலத்திசை திசைதொட்டெறி யமைவுற்றிரு திசைபோ
யகலத்திரை பொருமைக்கட லகடெக்கல திடவை
யகலத்துயர் பவழக்கட லதெனப்பொரு வருமே. (கஅ)

இரண்டுந் தொடர்.

[பி-ம்.] [1] யக்களிற்றை விட்டுமுட்டவே. மாற,

வேறு.

1634 இன்னலே யிழைக்கும் வேடுவன் முதலே
யெறிந்தகற் சயிலமு மடுதற்
குன்னரு மதமா வுதைத்தகற் பொருப்பு
முக்கணோன் பரல்விசும் புறலாற்
பொன்னகர் தனக்கு வேதநூற் பொருளைப்
புலவர்தாம் புலமையா னுழைந்து
கன்னக ரெனும்பேர் வாய்மையா யதெனக்
கழறினர் காமரு துறவோர். (உ0)

1635 பொன்மலை யெனவே பணைத்ததிண் புயத்தான்
புழுங்கியே புடைத்தடி பெயர்த்து
முன்மலைந் தறியா வடுவரு நுதன்மா
முனிந்தடி பெயர்த்தமண் டுகள்போய்
நன்மலை யெனவே மருண்மலைந் தறியார்
நாடொறு ஞானநூல் நவின்று
கன்மலை களுமண் மலையென லாகுங்
காட்சியு மரீஇயின மன்னோ. (உக)

1636 நினைவினி யெவனென் றுளிர்படை யதன்மே
னினைவிலான் மழைதவழ் குடுமிப்
பனையினெண் மடங்காய்ப் பணைமரா மரத்தாற்
பனிவரை முகட்டில்வீ ழிடிபோற்
றுனையொடுங் களிற்றி னுச்சிமேற் புடைப்பச்
சோர்தரு சோரிகண் டிமையோர்
அனைவரு மிரியல் போயின ரென்று
லார்பினை யிரியல்போ காதார். (உஉ)

1637 இமைப்பொழு தயர்வுற் றயர்வுயிர்த் ததற்பி
னெமக்குமீ தெழுவெனுங் குறிப்பா
லமைப்பருந் துப்பின் மராமர மயலொன்
றடுபுழைப் பணைக்கையாற் கிளைத்தே

யுமைக்கொரு புறத்தான் பொருவெனு மறத்தா
　　னுச்சிமே னிமிர்ந்துவீ சுதலுஞ்
சுமைத்தயி ரெனவே பனிற்றின மூளை
　　சொரிந்தசெங் கதிர்கள்போற் சோரி. (உங)

1638 தாக்குகைக் களிற்றி னுச்சிகொப் பிளிப்பத்
　　தளித்தெழு குருதியுந் தழல்கூர்
நோக்கினன் சென்னி யகத்தவாய்க் கொதித்து
　　நுரைத்தெழு குருதியும் விசும்பின்
மேக்குறுத் தருண மழைப்பட லத்து
　　மெய்யுறக் கதுவலா லதனைப்
பார்க்குநர் விழிக்குச் செக்கர்வா னெனலாம்
　　பண்பினைக் கொடுத்தது மன்னோ. (உச)

1639 காடெலாம் பரந்த சோரிகண் டுயிர்வே
　　டுவர்கணத் துடன்களிற் றினத்தை
யோடலா வகைகொண் டொழுகியே மறித்து
　　முறுசெருக் களம்புக வுரவோர்
மூடர்பாற் பிறந்த சினமினத் தினையு
　　முருக்குதல் சாதமென் றுளத்தே
நாடலா மளவிற் பிறவிலங் கினொடு
　　நண்ணுமற் றெருதிசை யுதிரம். (உரு)

1640 கொட்புறு குருதி யாற்றுநீந் தியதோர்
　　கோடுயர் களிற்றுநீள் பனைக்கை
யுட்குறக் கைப்பற் றினன்மத களிறு
　　மொழுக்குஞ்ஞோர் வேடனைப் பற்று
முட்கொடு கொடுமுட் களைபவ ரெனவே
　　முறையினெற் றுதலையெற் றுக்கை
யெட்குழம் பெனலா நிலையில்வெற் றுடலத்
　　திரியல்போ யினவுயி ரீண்டும். (உசு)

1641 குளிறுசெங் குருதிப் பரவையு ளுபய
கோடுடைக் கேழனீங் துதலுங்
களிறெனும் பெயருண் டிதற்குமென் றிடது
கரத்தினுற் பற்றியே யோச்ச
வொளிறுகூன் பிறைக்கோட் டோங்கன்மத் தகத்தை
யுழுததா லுதிரவா ரியொடும்
வெளிறுமொண் ணிணங்கொப் பிளிப்பவல் லுளியாம்
விதியதன் மருப்பதற் களித்த. (உஎ)

1642 ஊனளா வுதிரக் கடலுளாந் தவள
வுதளத ளருணமுற் றதனுற்
கானமான் றனைப்போ லருணமா மெனும்பேர்
கைக்கொள லுற்றதென் றுறத்தேர்
தானவா னவர்க ளுடுபதிக் கமைந்த
தவளமண் டலத்தினுட் களங்க
மானமான் றவள வொளியுரு தமைந்த
தற்புத மென்பர்சந் ததமே. (உஅ)

1643 வெண்ணிணக் கொழுஞ்சேற் றெடுசெழுந் தடியு
மிகுதியி னளவளாய் விழுமப்
புண்ணுமிழ் குருதிப் புனலுவட் டெடுத்துப்
போக்கறப் புகுந்துழக் குதலாற்
கண்ணகன் றுளவவ் வயின்மரீஇப் பரந்த
கழுகினீள் கணம்படிந் தமையான்
மண்ணக மெருவைப் புனலென வதனை
வடிப்பதும் வாய்மையா மெனுமே. (உகூ)

1644 காய்சினக் களிற்றைப் பாதிவாய்க் கொளலுங்
கண்ணகன் மலேமுழைக் கிடக்கு
மாசுணத் திரளைக் குருதியா றெடுத்து
மறித்துமாண் செருக்களங் குறுகப்

பாய்மருப் பிபமுங் கதைகொள்வே டுவனும்
பாம்பின்வால் பற்றியெற் றுதலும்
போசனக் கரியே களபமாய்த் தலைபோய்ப்
பொறியராக் கவந்தமா யினவே. (௩௦)

1645 கொடிப்புலித் திரளு முளியமும் வயிரக்
கோட்டுயர் கலையுமாங் கணுகத்
தொடித்தடந் தோளா னிடக்கையாற் பற்றிச்
சுற்றிமா திரத்தின்மீ தெறியப்
பிடித்தடு பணைக்கைக் களிறுமாங் கவற்றைப்
பீடுளான் றாளின்மீ தெற்றத்
துடித்துயி ரிழந்து கிடந்தவா வினிமேற்
றொடுபடை யெவனெனத் துணிவான். (௩௧)

1646 தளிர்த்தெரி குஞ்சிப் பிறைபுரை யெயிற்றுத்
தழலுமிழ் விழியவாய்க் குருதி
குளித்துறு புலவுண் டலகையி னடுவட்
குதித்தெழுந் தொருகுறும் பூதங்
களித்திடத் துணைத்தா ளொருகையாற் பற்றிக்
களிற்றின துச்சிமேற் புடைப்பத்
துளித்தது சோரி விசைத்தது விசும்பிற்
றோன்றின சுரர்துணுக் குறவே. (௩௨)

1647 மடற்பனைத் தனிக்கை யிருமருப் பொருமும்
மதத்தநால் வாய்ப்பொரு களிறு
மடற்படைக் களத்து ளிரிந்தபா ரிடத்து
ளடுத்ததொன் றடிபிடித் தெற்றத்
தடக்கையோ ரிரண்டில் வலக்கையாற் படைக்கை
தடுத்தெடுத் திடவவன் றலைமே
லுடக்கியே யுதிர முகப்படைத் திபக்கை
யுடக்கற விசைத்ததப் பூதம். (௩௩)

1648 வழிந்தவெண் டிரைப்பாற் கடலினைக் கடைநாண்
மருந்துறு முனமழற் பிழம்பைப்
பொழிந்தவெவ் விடமாங் கெழுதலு மிரிந்து
போனபுத் தேளிரி னுடலைப்
பிழிந்துயிர் பருகக் கருமையுங் கயப்பும்
பிரிந்தபூட் சியவென வுள்ளம்
அழிந்துடல் பதைத்தா ரறிஞர்வா னவர்க
ளலக்கணுற் றமைசொலற் கரிதே. (௩௪)

1649 ஆளியொன் றதன்கைப் பற்றினன் மறித்து
மயலொரா ளியின்கர நமன்றன்
கேளிரு நடுங்க வாடன்மாப் பற்றிக்
கிட்டியெற் றுதலையொட் டுதலாற்
றுளின்மேம் படுநர் தமக்குறு பகைவர்
தாந்தமிற் றுக்கவே கொளுத்திக்
கோளிழைத் ததுபோன் றழிந்துடல் கிடந்த
குறைந்துயிர் புறக்கொடுத் தனவே. (௩௫)

1650 திக்கெலா மருண நிறம்படர்ந் திருளைத்
தெறுபடை மறவனுங் களிறு
மிக்கபோர் விளைத்த களத்திடை யுதிர
விரிதிரை மேற்கொளா நிற்றல்
செக்கரொண் பவளப் பரவையுட் குளிகச்
சிகரமால் வரைகளே யுவமை
தக்கதாய் முருக்கு மலர்வன போன்று
தழைத்தெழும் விசும்புணீர்த் தளியே. (௩௬)

1651 மலைகளாற் றெய்வப் படைகளால் வயிர
மரங்களால் வல்விலங் குகளால்
உலைவில்பல் வகைப்போ ரிரும்பனைத் தடக்கை
யொருத்தலோ டெதிர்மலைந் தனனு

அலைகுலாங் குருதி யாற்றுணின் றெயிற்று
லடியித ழதுக்கிநீள் விசும்பைக்
கொலைவல்வே டுவனைக் கினன்வெரீஇ யிரிந்தார்
குலிசனு தியவிமை யவரே. (௩௭)

1652 இடதுகை யதனிற் பரிதிமண் டலம
தெவ்வள வவ்வள வாகப்
படர்விழு மியதோர் கேடக மதனைப்
பற்றுபு குறங்கினிற் புடைத்து
நடமிடு பொழுதி னிருவிசும் பினெடு
நானில மதனைவாய்க் கொள்வான்
கடலுவட் டெடுத்த தெனநடுங் கினபார்
காலனு மிரியல்போ யினனே. (௩௮)

வேறு.

1653 எடுத்து வீசின னக்கணத் ததனகத் தெழுகான்
மடுத்த சோரியைத் திசைதொறு மிறைத்துவான் றிசைக்க
ணடுத்த மாதிர மவற்றெடுங் குலக்களி றவைக்குங்
கொடுத்த தொண்ணிறப் பவளமால் வரையெனக் குறியே.

1654 பருதி யிற்சுடர் கால்வது வாசவன் படையுங்
கருதி லாங்கதன் கடைநுனி கடுப்பது களிகூர்
செருவி லந்தக னேர்படிற் போழ்ந்துடல் சிதைத்தே
குருதி யுட்குளித் தெழுமொரு வாள்வலங் கொண்டான்.

1655 நாந்த கப்படை விதிர்த்தொளி நனிதழை தரலும்
வாய்ந்த கைக்கிடு கினைத்துடை புடைத்தொலி வரலுந்
தேய்ந்த வூழியி லெழுதடி யிடியெனத் திரைப்பா
ரேந்து பாந்தள்கோ ளிழைத்ததெவ் வரவுகோ ளிழையா.

1656 அக்க ணத்துமா திரத்தன வயிற்படை யதன்வா
யுக்க நோன்பொறி யொருங்குடுக் கணங்கள்வீழ் வதெனத்
திக்கு பாலரு மழுங்கினர் தவரொடுஞ் செயிர்தீர்
மிக்க வானவர் வெருவினர் யார்பினை வெருவார். (௪௨)

1657 புண்க றங்கின கறைக்களத் தடுபடைப் புளினன்
கண்க றங்கெனச் சுழல்வுறு மளவினிற் கதிர்சேர்
விண்க றங்கென வரைகறங் கின[1]வென விரிநீர்
மண்க றங்கெனச் சுழன்றன சுழன்றமற் றுளமா. (சரு)

1658 மறங்கொ டுத்துள கடைக்கணங் கியிற்புனல் வறங்கூர்
திறங்கொ டுப்பவன் றழங்கொலி செவிப்புழை நுழைந்தே
அறங்கொ டுப்பவின் புரந்துளா ரிபங்கள்போ லயலே
புறங்கொ டுப்பவும் புறங்கொடா தவனெதிர் பொருமா. ()

1659 தொடர்ந்தபோர்க்களத்தயலதாங்தொடர்வரைப்புறத்தாய்ப்
படர்ந்த பாறையொன் றிருமருப் புழுதுபார் மேலா
யிடந்து கொண்டெதிர் கிடுகென நடுதலு மெடுத்தே
முடங்கு கைநிமிர்த் தடிக்கடி விதிர்த்ததோர் முசலம். ()

1660 விதித்த யாவையும் விலக்கிநூல் விலக்கிய யாவு
மதித்த வெம்மையர் மனவிருட் பிழம்பென மண்மே
லுதித்த தோர்கரு ஞாயிறு மிஃதெனு முருவிற்
பொதிர்த்த துச்சியான் முதலினுற் புயலக டதலம். (சசு)

1661 ஈசன் மன்னுயி ரென்றிரண் டில்லையொன் றெனும்பொய்
வாச கம்பயில் வாதியர் மனமென வயிர்த்த
தூச லாட்டியீட் டியபொருள் புரந்தற னுருா
நீச ராசைபோன் றகன்றது நிறுத்துபா றையதே. (சஎ)

1662 நெடுவி சும்புற நீண்டபொற் குன்றினெண் குவட்டா
லடுப டைக்குள்வன் முசலமென் றமைத்துவைத் ததனை
யுடுவின் மண்டலத் துறவொரு கையினெடுத் தூழிக்
கடுவ ளிக்கிணை யெனகடித் திடிக்குமக் களிறே. (சஅ)

1663 முரணு டைக்கடுங் காலதண் டமர்க்கெதிர் முரணி
னிரண மேம்படு மதுகைய திகற்கெதி ருநர்தஞ்
சரணு டுங்கர மொடித்துடற் குடர்புனை சயத்தான்
மரணமாங்கவர்க்குய்த்துவான்கொடுக்குமாண்புடைத்தே.

[பி-ம்.] [1] வெள. சா.

மதுரைத்தமிழ்ச்சங்கத்து

1936-ஆம்வருஷ ஏப்ரல்மாத வரவு செலவு கணக்கு.

விவரம்	வரவு 1936 ஏப்ரல்	வரவு 1935 ஏப்ரல்	விவரம்	செலவு 1936 ஏப்ரல்	செலவு 1935 ஏப்ரல்
I General Section :			I General Section :		
(1) மாதச்சந்தாவகையில் வரவு...	310 … …		(1) சங்கம்மானேஜ்மெண்டாபீஸ் சிப்பந்திகட்குச் சம்பளம் செல்லாக்கியது …	78 … …	
(2) சங்கக் காலியிடத்திற்கு மாத வாடகை வரவு …	30 … …		(2) சங்கக்கலாசாலை உபாத்தியாயர்கட்குச் சம்பளம் செல்லாக்கியது …	140 … …	
			(3) சங்கக்கலாசாலை மாணவர்களுக்குப் போஷணைக்காகச் செல்லாக்கியது. …	136 14 5	
			(4) Stationery, contingencies வகையிற் செலவு …	4 6 9	
			(5) பாண்டியன்புத்தகசாலைக்கு வரும் பத்திரிகைக்குச் சந்தா செல்லாக்கியது. …	6 9 …	

(3) Miscellaneous வரவு ...	5	10	...			
மொத்தம் ரூ ...	345	10	...	111	3	9
II EDITORIAL SECTION :						
(1) சங்கத்தின் அங்கத்தினர்களிடமிருந்து சந்தாவகையில் வரவு.	11	...	...			
(2) சங்கப்பதிப்புப்புத்தகங்கள் விற்றவகையில் வரவு ...	10	3	6			
மொத்தம் ரூ ...	21	3	6	45	15	6

(6) தபால், தந்தி வகையிற்செலவு	4	...	...			
(7) சங்கமாபீசு சில்லறைவேலைகள் சம்பந்தமாக அச்சுக்கூலி பைண்டிங்கூலிவகையிற் செலவு...	4	...	...			
(8) சங்கப்பரீக்ஷைசம்பந்தமாகச் செலவு ...	14	9	4			
மொத்தம் ரூ	388	7	6	463	14	10
II EDITORIAL SECTION:						
(1) டை ஆபீஸ் சிப்பந்திகட்குச் சம்பளம் செல்லாக்கியது ...	85	...	...			
(2) சங்கப்பதிப்புப்புத்தகங்கள் அச்சிடும்சம்பந்தமாக ஸ்டேஷனெரி கண்டின்ஜன்ஸிவகையிற் செலவு. ...	5	1	9			
(3) டை. சம்பந்தமாக அச்சுக்கூலி, பைண்டிங்கூலிவகையிற் செலவு.	84	4	...			
(4) தபால் தந்திவகையிற் செலவு	8	...	...			
மொத்தம் ரூ ...	182	5	9	176	8	...

III Press Section:						
(1) அச்சுக்கூலிவகையில் வரவு	74	...	...			
(2) பைண்டிங்கூலிவகையில் வரவு ...	3	...	...			
மொத்தம் ரூ ...	77	...	...	91	8	...

III Press Section:						
(1) அச்சாபீஸ்சிப்பந்திகளுக்குச் சம்பளம் செல்லாக்கியது ...	14	5	2			
(2) ஷை ஆபீஸ் Stationery Contingencies வகையிற் செலவு.	4	5	9			
மொத்தம் ரூ ...	18	10	11	43	14	11

ஆகமொத்தம் வரவு ரூ. ...	443	13	6	248	11	3	ஆக மொத்தம் செலவு ரூ.		589	8	2	684	5	9
மாத ஆரம்பத்திலிருந்த கையிருப்பு ரூ. ..	523	3	7	3785	3	7	மாதமுடிவில் மீதியிருப்பு ரூ ...	*	377	8	11	3349	9	1
ஆகமொத்தம் ரூ. ...	967	1	1	4033	14	10	ஆக மொத்தம் ரூ ...		967	1	1	4033	14	10

*By M. R. C. C. Bank
Pass Bk. Rs. 350- 0- 0

Cash on hand Rs. 27- 8- 11

377- 8-11

குறிப்பு:—மேலேகண்ட விவரப்படி இம்மாதமுடிவில் மீதி இருப்பு ரூ. 377—8—11 தவிர, மதுரை M. R. C. C. Bankல் வட்டிக்காக Fixed Depositல் வைக்கப்பட்டுள்ள மூலதனங்கள் (1) ரூ. 25011—5—0. (2) ரூ. 1050—0—0; மதுரையிலுள்ள இந்தியன் பாங்கில் வட்டிக்காக Fixed Depositல் வைக்கப்பட்டுள்ள மூலதனங்கள் (1) ரூ. 10000. (2) ரூ. 10000. (3) ரூ. 5000. காரைக்குடி மகா-ள-ள-ஸ்ரீ சா. அப. ராம. நாராயணன்செட்டியாரவர்களின் ரெங்கூன் அய்மேன்கடையில் வட்டிக்குச் சேர்க்கப்பட்டுள்ள மூலதனம் ரூ. 1200 ஆகும்.

Audited and found correct,
V. S. RAMASWAMI, AUDITOR, 2—5—'36.

LAKSHMINARAYANAN,
MANAGER, 2—5—'36.

மதுரைத்தமிழ்ச்சங்கத்து

1936-ஆம்வருஷ மேமாத வரவு செலவு கணக்கு.

விவரம்.	வரவு 1936 மே			வரவு 1935 மே			விவரம்	செலவு 1936 மே			செலவு 1935 மே		
I GENERAL SECTION:							I GENERAL SECTION:						
(1) மாதச்சந்தாவகையில் வரவு ...	299	8	...				(1) சங்கம் மானேஜ்மெண்டாபீஸ் சிப்பந்திகளுக்குச் சம்பளம் செல்லாக்கியது ...	73	8	...			
(2) சங்கக்காவியிடத்துக்கு மாதவாடகை வரவு ...	30	...	...				(2) Stationery contingencies வகையிற்செலவு ...	2	7	9			

(3) Miscellaneous வரவு ...	5	4	...			
மொத்தம் ரூ ...	334	12	...	25448	1	2
II EDITORIAL SECTION:						
(1) செந்தமிழ்ப்பத்திரிகைக்குச் சந்தாவகையில் வரவு ...	4	...	...			
(2) சங்கப்பதிப்புப்புத்தகங்கள் விற்றவகையில் வரவு ...	14	10	6			
(3) செந்தமிழ்ப் பழையபிரதிகள் விற்றவகையில் வரவு. ...	1	...	...			
மொத்தம் ரூ ...	19	10	6	81	15	...

(3) தபால், தந்திவகையிற்செலவு	2	...	...			
மொத்தம் ரூ ...	77	15	9	26681	11	8
II EDITORIAL SECTION:						
(1) சங்கப்பதிப்புப்புத்தகங்கள் அச்சிடும் சம்பந்தமாக அச்சுக்கூலி பைண்டிங்கூலிவகையிற் செலவு	63	...	...			
(2) தபால், தந்திவகையிற் செலவு. ...	8	...	...			
மொத்தம் ரூ ...	71	...	...	271	5	7

III Press Section:

(1) அச்சுக்கூலிவகையில் வரவு.	60	...	...			
(2) பைண்டிங் கூலிவகையில் வரவு ...	3	...	...			
மொத்தம் ரூ ...	63	...	...	99	8	...

III Press Section:

(1) அச்சாபீஸ் சிப்பந்திகட்குச் சம்பளம் செல்லாக்கியது ...	38	8	...			
(2) ஷை ஆபீஸ் **Stationery contingencies** வகையிற் செலவு.	6	5	...			
மொத்தம் ரூ. ...	44	13	...	52	6	1

ஆகமொத்தம் வரவு ரூ ...	417	6	6	25629	8	2	ஆக மொத்தம் செலவு ரூ ...	193	12	9	27005	7	4
மாத ஆரம்பத்திலிருந்த கையிருப்பு ரூ ...	377	8	11	3349	9	1	மாத முடிவில் மீதி இருப்பு ரூ ... *	601	2	8	1973	9	11
ஆகமொத்தம் ரூ ...	794	15	5	28979	1	3	ஆகமொத்தம் ரூ ...	794	15	5	28979	1	3

*By M. R. C. C. Bank
Pass Book Rs. 469- 8- 0
Cash on hand Rs. 131-10- 8

601-2- 8

குறிப்பு:—மேலேகண்ட விபரப்படி இம்மாதமுடிவில் மீதி இருப்பு ரூ. 601-2-8 தவிர, மதுரை M. R. C. C. Bankல் வட்டிக்காக Fixed Depositல் வைக்கப்பட்டுள்ள முதல்கள் (1) ரூ. 25011-5-0; (2) ரூ. 1050-0-0; மதுரையிலுள்ள இந்தியன்பாங்கில் வட்டிக்காக Fixed Depositல் வைக்கப்பட்டுள்ள முதல்கள் (1) ரூ. 10000; (2) ரூ. 10000; (3) ரூ. 5000; காரைக்குடி [illegible] ஸ்ரீ [illegible] சாராயணன்செட்டியாரவர்களின் ரொக்கம் அம்மேன்கடையில் வட்டிக்குச் சேர்க்கப்பட்டுள்ள முதலும் ரூ. 1200 ஆகும்.

LAKSHMINARAYANAN,
MANAGER, 1—6—'36.

Audited and found correct,
V. S. RAMASWAMI, AUDITOR, 2—6—'36.

மதுரைத்தமிழ்ச்சங்கத்தில் விற்கப்பெறும் புத்தகங்கள்.

II. செந்தமிழ்ப்பிரசுரம்.

1.	ஐந்திணையைம்பது உரையுடன்	0	4	0
2.	கணுநூல் (5) இனியநாற்பது (உரையுடன்)	0	3	0
3.	*வளையாபதிச்செய்யுட்கள்			
4.	புலவராற்றுப்படை	0	3	0
6.	நேமிநாதம் (உரையுடன்)	0	12	0
7.	திருநூற்றந்தாதி (உரையுடன்)	0	6	0
8.	திணைமாலை நூற்றைம்பது (உரையுடன்)	0	8	0
9.	அநுமானவிளக்கம்	0	10	0
10.	அட்டாங்கயோகக்குறள்	0	2	0
11.	*விவசாயரசாயன சாஸ்திரச்சுருக்கம்			
12.	*பன்னிருபாட்டியல்			
13.	நான்மணிக்கடிகை (பழைய உரை)	0	4	0
14.	மூத்தொள்ளாயிரச்செய்யுட்கள்	0	3	0
15.	திருச்செந்திற்கலம்பகம்	0	8	0
16.	திருவாரூருலா	0	8	0
17.	சுகசந்தர்சனதீபிகை	0	12	0
18.	இயற்கைப்பொருட்பாடம்	0	4	0
19.	தேவையுலா	0	3	0
20.	நரிவிருத்தம்	0	2	0
21.	சிதம்பரப்பாட்டியல் (உரையுடன்)	0	8	0
22.	*திருக்கலம்பகம் (ஷை)			
23.	*விக்கிரமசோழனுலா			
24.	குருமொழிவினவிடை	0	1	0
25.	கேசவப்பெருமாள் இரட்டைமணிமாலை	0	2	0
26.	திருத்தணிகைத்திருவிருத்தம்	0	1	0
27.	மதுரைத்திருப்பணிமாலை	0	8	0
28.	*சந்திராலோகம்			
29.	*சோழவம்சசரித்திரச்சுருக்கம்			
30.	ஞானாமிர்தக்கட்டளை	0	8	0
31.	பாண்டியம்	0	4	0
32.	மநீஷாபஞ்சகம்	0	8	0
33.	வேளிர்வரலாறு	0	8	0
34.	அகப்பொருள்விளக்கம்	1	4	0
35.	*திருமந்திரநூறுபாட்டுக்குரை			
36.	உவமானசங்கிரகம்	0	1	0
37.	மாறனலங்காரம் மூலமும் உரையும்	4	8	0
38.	திருப்புல்லாணிமாலை	0	2	0
39.	*பழமொழி மூலமும் பழையஉரையும் (முதல் 100 செய்)	1	0	0

40.	திருமாலிருஞ்சோலைமலை அழகர்பிள்ளைத்தமிழ் ...	0	8	0
41.	பொருட்டொகைநிகண்டு	0	6	0
42.	அகராதிநிகண்டு	0	12	0
43.	மேகவிடுதூது	0	2	0
44.	திருக்குற்றாலமாலை	0	2	0
45.	தண்டலையார்சதகம்	0	4	0
46.	இராமோதந்தம்	0	3	0
47.	பழமொழிமூலமும் பழைய உரையும் (2-வது 100செய்)	1	0	0
48.	சேதுநாடும் தமிழும்	0	6	0
49.	*கடைவள்ளலார்காலம்	0	6	0
50.	தமிழரும் ஆந்திரரும்	0	4	0
51.	மதங்கசூளாமணி	1	0	0
52.	கூடற்புராணம்	0	10	0
53.	திருவள்ளுவர்	0	6	0
	ஷை ஆங்கிலத்தில்	0	6	0
54.	அரும்பொருள்விளக்க நிகண்டு ...	1	4	0
55.	மாறனகப்பொருளும் திருப்பதிக்கோவையும் ...	0	12	0
56.	பாப்பாவினம்	0	10	0
57.	மதுரைமும்மணிக்கோவை	0	5	0
58.	பழனிப் பிள்ளைத்தமிழ்	0	3	0
59.	கடம்பர்கோயில் உலா	0	6	0
60.	சங்கரநயினார்கோயில் அந்தாதி	0	6	0
61.	கலைசைக்கோவை	0	12	0
62.	பெருந்தொகை	5	0	0
63.	சூடிக்கொடுத்தநாய்ச்சியார்தோத்திரப்பாமாலை ...	0	5	0

* இவ்வடையாளமிட்டப்பட்டவை இப்போது கைவசமில்லை.

குறிப்பு:-1. சங்கத்தினின்று மாதமொருமுறை அரிய பெரிய விஷயங்களைக்கொண்டுவெளியாகிவரும் இச்"செந்தமிழ்"ப்பத்திரிகைக்கு வருஷச் சந்தா ரூ 4. தனிப்பிரதியின் கிரயம் அணா 8. வெளிநாடுகளுக்கு வருஷச் சந்தா ரூ 4—8—0. இதுவரை 33 தொகுதிகள் பூர்த்தியாயிருக்கின்றன. இவற்றுள் 1, 2, 3, 7, 8, 9, 10, 16-ம் தொகுதிகள் கைவசமில்லை. பைண்டு செய்யப்பெறாததொகுதிகள் தொகுதி 1-க்கு ரூ 4—0—0-வீதமும், பைண்டு செய்யப்பெற்ற தொகுதிகள் தொகுதி 1-க்கு ரூ 4—12—0 வீதமும் விற்கப் பெறும். வி. பி. சார்ஜ் பிரத்தியேகம்.

2. சங்கப்பிரசுரம், செந்தமிழ்ப்பிரசுரம், செந்தமிழ் முழுத்தொகுதி— இவற்றுள் ஒவ்வொருபுத்தகத்திலும் ஒரேதடவையில் 10 பிரதிகளும் அதற்கு மேற்பட்டும் வாங்குவோர்கட்கு மொத்தக்கிரயத்தொகையில் 100க்கு 10 வீதம் கமிஷன் தள்ளிக்கொடுக்கப்படும்.

3. சங்கப்பதிப்புப்புத்தகங்களை, ஒரு ரூபாய்க்கும் அதற்கு மேற்பட்டும் வாங்குவோர்கட்கு, ரூபா ஒன்றுக்கு அரை அணா வீதம் கமிஷன் தள்ளிக் கொடுக்கப்படும்.

லக்ஷ்மீநாராயணையர், மானேஜர்.